கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

தேதி: 03.01.2024

பெறுநர்,
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**<u>இன்றைய நிகழ்ச்சி (04.01.2024)</u>**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மற்றும் தோட்டக்கலை அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களை ஊக்குவிக்கும் சங்கம் இணைந்து "தோட்டக்கலைப் பயிர்களின் சேமிப்புத் திறனை மேம்படுத்தும் நவீன அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள்" என்ற சர்வதேச கருத்தரங்கு 04.01.2024 மற்றும் 05.01.2024 ஆகிய தேதிகளில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூரில் நடைபெற உள்ளது. இக்கருத்தரங்கில் சுமார் 400 தோட்டக்கலை விஞ்ஞானிகள் பங்கேற்க உள்ளனர். மொத்தம் 20 முன்னோடி விஞ்ஞானிகள் கலந்து கொண்டு சிறப்பு ஆய்வுக்கட்டுரைகளை விரிவுரையாக்க உள்ளனர். அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், நெதர்லாந்து, மலேசியா, பங்களாதேஸ், ஸ்ரீலங்கா, தாய்லாந்து உள்ளிட்ட பத்து நாடுகளைச் சார்ந்த விஞ்ஞானிகள் சிறப்புரையாற்ற உள்ளனர். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்கள் முன்னிலை வகிக்கிறார். ஆந்திரா மாநிலம் ஒய்.எஸ்.ஆர் தோட்டக்கலைப் பல்கலைக்கழக துணைவேந்தர், முனைவர் ஜானகிராமன் மற்றும் நறுமணப்பயிர்கள் இயக்கக தலைவர் Shri.D.சத்யன், IFS, ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நாள் : **04.01.2024 (வியாழக்கிழமை)**  நேரம் : காலை **9.30** மணி

இடம் : அண்ணா அரங்கம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**

இணைப்பு: நிகழ்ச்சி அழைப்பிதழ்